பக்கங்கள் 17+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## மின்சாரம் தாக்கி மாணவன் சாவு!

### புத்தளத்தில் சோகம்

(ரஸீன் ரஸ்மின்)



புத்தளத்தில் மின் சாரத் தாக்குதலுக் குள்ளாகி, புத்தளம் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 18 வெள்ளிக்கிழமை 31.05.2024 அதிர்வு 305



# தமிழரசு வழக்கு ஜூலை 19இற்கு!

## எதிராளிகள் ஒன்றுசேர்ந்து பதில் மனுவை தாக்கல் செய்வதற்கு மன்று கால அவகாசம்

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கை விரைந்து முடிவுறுத்துவதற்கு வசதியாக எதிராளிகள் அனைவரும் தமக்குள் ஒன்றுபட்டு ஒரு நிலைப்பாட்டில் தங்கள் பதில் மனுக்களைத் தாக்கல் செய்வர் என இன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டமையை அடுத்து, அதற்கு வசதியாக கால அவகாசம் வழங்கி, வழக்கை ஜூலை 19 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

அதேசமயம் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு மற்றும் பதவியேற்புத் தொடர்பில் திருகோணமலை மாவட்டநீதிமன்றம்ஏற்கனவேவிதித்திருந்தகட்டாணை உத்தரவு, இன்று முதல் மீண்டும் ஜூலை19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. 04

# நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் சுமத்தப்பட்ட அகிலன் இன்று நேரில் மன்றில் முன்னிலை

## அமர்வின் முடிவில் பிணையில் செல்ல அனுமதி



இலங்கைத் தமிழரசுக் கட்சி வழக்குத் தொடர்பில் தமது இலத்திரனியல் பத்திரிகையில் வெளியிட்ட செய்தி தொடர்பாக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுக்கு இலக்காகி, நீதிமன்றத்துக்குச் சமுகம் தராதமையால் நீதிமன்றத்தால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அகிலன் முத்துக்குமாரசாமி இன்று காலை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மன்றில் பிரசன்னமானார். அவர் சார்பில் சட்டத்தரணி 04

# ஜி.சீ .ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியீடு!




2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ .ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று பிற்பகல் வெளியாகின.

பரீட்சைகள் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

https://www.doenets.lk

எனும் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து, பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிட முடியும்.

ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சைகடந்தஜனவரி மாதம் இடம்பெற்றிருந்தது. 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# மட்டக்களப்பில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட நடேசனின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல்

(பழுவூரான்)

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் நாட்டுப் பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி கோரிய போராட்டமும் மட்டக்களப்பு காந்திப் பூங்காவிலுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் இன்று நடைபெற்றது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பவற்றின் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் திருவுருவப் படத்துக்கு முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.கே.ரவீந்திரன் ஆகியோர் இணைந்து மலர்மாலை அணிவித்தனர்.

அத்தோடு நிகழ்வில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக ஏற்பாட்டாளர்கள் அவரின் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தியதோடு, ஈகைச் சுடர்களையும் ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து நினைவுத் தூபிக்கு முன்பாக இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், முன்னாள் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன், முன்னாள் பிரதி மேயர் தி.சத்தியசீலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் எஸ்.சுரேஷ், மட்டக்களப்பு மாவட்ட இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் பொன்.உதயரூபன், மாவட்ட ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நினைவேந்தல் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அரசியல் பிரமுகர்கள் அனைவரும், மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் சமூகப் பற்றாளர் ஐயாத்துரை நடேசன் ஊடகப் பணியோடு, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் பயணிக்க வேண்டுமென்பதில் உறுதியாகச் செயற்பட்டார். இந்நிலையில் 20 ஆண்டுகள் கடந்தும் அவருக்கான நீதி இதுவரை மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய அரசுகளால் வழங்கப்படவில்லை. எனவேதான், சர்வதேச விசாரணைகளை வேண்டி நிற்கின்றோம்." – என்றனர்.











# காணாமல்போன மீனவர்களின் வீடுகளுக்குச் சென்ற சிறீதரன்

## குடும்பத்தினருடன் கலந்துரையாடினார்

(ஏ.எச். ஹஸ்பர்)

திருகோணமலை, சல்லி பகுதியில் இருந்து அண்மையில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் காணாமல் போயுள்ள நிலையில், அவர்களின் வீடுகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இன்று விஜயம் செய்தார்.

இந்த மாதம் 20 ஆம் திகதி சல்லி பகுதியில் இருந்து காலை 10 மணியளவில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் மாயமாகியுள்ளனர். சல்லி, 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குட்டிராசா சசிக்குமார் (வயது 45), முருகையா சுஜந்தன் (வயது 22) என்பவர்களே காணாமல்போயுள்ளனர். தேடுதல் நடவடிக்கை தொடர்கின்ற போதிலும் அவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை.



இந்த விடயம் தொடர்பில் அறிந்த சிறீதரன் எம்.பி., காணாமல்போன மீனவர்களின் வீடுகளுக்கு இன்று சென்று அவர்களின் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார்.

தேடுதல் நடவடிக்கைக்காக மேலும் பல உரிய தரப்புக்களுடன் பேசுவதாகவும் சிறீதரன் எம்.பி. இதன்போது தெரிவித்தார்.

# கற்பிட்டியில் பெருமளவு பீடி இலைகள் மீட்பு!

## இரண்டு சந்தேகநபர்கள் கடற்படையினரிடம் சிக்கினர்

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – உச்சிமுனை கடற்பிரதேசத்தில் மிதந்துகொண்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகள் நேற்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

மேலும், இதனுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.





கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 46 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் உச்சமுனை கடற்படையினர் கற்பிட்டி – உச்சமுனை கடல் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது, அங்கு சந்தேகத்துக்கிடமான இயந்திரப் படகு ஒன்றைப் பரிசோதனை செய்தனர்.

இதன்போது, அந்த இயந்திரப் படகில் 19 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 617 கிலோ 600 கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கும் நோக்கில் குறித்த பீடி இலைகள், கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட 617 கிலோ 600 கிராம் பீடி இலைகள் மற்றும் இயந்திரப் படகு, கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வடமேல் மாகாண போதை ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக்குச் சொந்தமான கடல் மற்றும் கரையோரப் பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் போதைப்பொருளுக்கு எதிராகக் கவனவீர்ப்புப் பேரணி

(எஸ்.நிதர்ஷன்)

"போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம். வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டியெழுப்புவோம்" – எனும் தொனிப்பொருளில் போதைப்பொருளுக்கு எதிரான கவனவீர்ப்புப் பேரணி யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இன்று நடைபெற்றது.

நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குப் பின்பக்கமாக அமைந்துள்ள நல்லை ஆதீனத்துக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி அங்கிருந்து நல்லூர் பிரதேச செயலகம் வரை சென்று நிறைவடைந்தது.



இதில் கலந்துகொண்டவர்கள், "மகிழ்ச்சியான குடும்பத்துக்குப் புகைத்தலே முதல் எதிரி, இளைஞர்களின் ஆண்மையை இல்லாது செய்யும் புகைத்தல் எதற்கு?, புகைத்தலை கைவிடு உனது வாழ்வில் மகிழ்ச்சி இருமடங்காகும், மானிடத்தின் உயிர் கொல்லி மதுவே நீ ஒழிக, அதிகரித்த இளவயது விவாகாரத்துக்குக் காரணம் போதைப்பொருளே, போதைப்பொருளைக் கைவிடு வாழ்வு வளமாகும், போதையில்லாத வாழ்வே எப்போதும் மகிழ்ச்சியைத் தரும்" – உட்படப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பிப் பேரணியாகச் சென்றனர்.

இந்தப் பேரணியில் சமுர்த்தி அதிகாரிகள், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பயனாளிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மின்சாரம் தாக்கி...

தள வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

புத்தளம், ஐந்தாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த துவான் சலீம் முஹம்மது சஹ்ரான் (வயது 17) எனும் மாணவனே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவன், கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனது வீட்டில் குளித்து விட்டு, முடி உலர்த்தி மூலம் முடியை உலர வைத்த சந்தர்ப்பத்திலேயே மின்சாரத் தாக்குதலுக்குள்ளானார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அந்த மாணவனை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்த்தனர். அவர் அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்தநிலையில், மேற்படி மாணவன் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம், உயிரிழந்த மாணவனின் சடலம் மீதான மரண விசாரணையை நடத்தி மின்சாரத் தாக்குதலால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்து சடலத்தைக் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தார்.

புத்தளம் சாஹிரா தேசியப் பாடசாலை மாணவனான இவர், கடந்த மாதம் நிறைவடைந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழரசு வழக்கு...

இன்று காலை வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதுவரை எதிராளிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பில் தமது தரப்பு அவதானங்களை வழக்காளியின் சட்டத்தரணி எடுத்துரைத்தார்.

ஏழு பிரதான எதிராளிகளும் மூன்று வெவ்வேறு விதமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். அவற்றுக்கு இடையே இணக்கமான ஒரு நிலைப்பாட்டைக் கண்டு, சுமுகமாக விடயத்தைத் தீர்ப்பது சாத்தியமற்றது என்றார் வழக்காளி தரப்புச் சட்டத்தரணி.

எதிராளிகள் தரப்பில் தமக்காகத் தாமே நேரில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இது விடயத்தில் கட்சி ரீதியாக எதிராளிகள் அனைவரும் இப்போது ஒன்றுபட்ட தீர்மானத்தை எடுத்துள்ளனர் என்றும், அதன் அடிப்படையில் ஒரே நிலைப்பாட்டை பதில் மனுக்களாக அவர்கள் சமர்ப்பிப்பார்கள் என்றும், அந்தச் சமர்ப்பணத்தின் அடிப்படையில் இணக்கமான முடிவு ஒன்றுக்கு வழக்காளியும் எதிராளிகளும் வர முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அந்தப் பதில் மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு ஜூலை 19ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கி, வழக்கை அந்தத் திகதிக்கு ஒத்திவைத்தது.

இதற்கிடையில், வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது கிளிநொச்சியைச் சேர்ந்த கட்சி உறுப்பினரான சண்முகராஜா ஜீவராஜா என்பவர் தம்மையும் இடையீட்டு எதிராளியாச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்தார். எதிராளிகளில் ஒருவரான சிறீதரன் எம்.பியின் சட்டத்தரணி வி.புவிதரனே அவருக்காகவும் முன்னிலையானார். எதிராளிகள் தரப்பில் அவரை ஓர் எதிராளியாகச் சேர்த்துக்கொள்வதற்கு ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

### நீதிமன்ற...

ஒருவரும் முன்னிலையானார்.

அவதூறு விவகாரம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சம்பந்தப்பட்ட இலத்திரனியல் பத்திரிகையில் வெளியான செய்தி தம்முடையதே என்று உறுதிப்படுத்தினார் அகிலன்.

எனினும், அதில் அவர் நீதிமன்ற அவமதிப்பு எதனையும் செய்யவில்லை என்றும், அதனால் குற்றம் எதுவும் இழைக்கப்படவில்லை என்றும் அவரது சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

செய்தி முழுமையாக தம்முடையதுதான் என்று அகிலன் முத்துக்குமாரசாமி ஏற்றுக்கொள்கின்றமையால், அவரைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய தேவை எழவில்லை என்று மேற்படி நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டை சுமத்தும் எதிராளியான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

எனினும், அவர் இழைத்த நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் தொடர்பில் தமது வாதத்தையும் சமர்ப்பணங்களையும் எழுத்தில் தாம் சமர்ப்பிப்பார் என்றும் சுமந்திரன் சொன்னார்.

அதற்கும் ஜூலை 19ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கி வழக்கை அந்தத் திகதிக்கு மன்று ஒத்துவைத்தது.

அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிரான பிடியாணை நடைமுறையில் உள்ளமையால் மன்றில் உரிய பிணைகளைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னர் அவர் வெளியேறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் உரிய பிணைகளை அவர் சமர்ப்பித்து தம்மை விடுவித்துக் கொண்டார்.

### ஜீ.சீ.ஈ.

குறித்த பரீட்சையில் 3 இலட்சத்து 46 ஆயிரத்து 976 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 2 இலட்சத்து 81 ஆயிரத்து 445 பாடசாலை பரீட்சாத்திகளும், 65 ஆயிரத்து 531 தனியார் பரீட்சாத்திகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் இராஜ்ஜியத்தின் கடைசி மன்னன் சங்கிலியனின் 405 ஆவது நினைவு தினம் இன்று



(எஸ்.நிதர்ஷன்,
பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் இராஜ்ஜியத்தின் கடைசி மன்னன் இரண்டாம் சங்கிலியனின் 405 ஆவது நினைவு தினம் இன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். நல்லூர், முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள இரண்டாம் சங்கிலிய மன்னனின் சிலையடியில் இன்று காலை 9 மணியளவில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தலைமையில் சங்கிலியனின் 405 ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது சங்கிலியன் மன்னனின் உருவச் சிலைக்கு மலர் தூவி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்னேந்திரன், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, தொழிலதிபர் இ.எஸ்.பி நாகரத்தினம், தென்னிந்திய ஊடகவியலார் ஸ்ரீநிவாசராமன், சிவசேனை அமைப்பின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மறுக்கப்படும் நீதி

இலங்கைத்தீவில் போர்க்காலத்தில் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கும் சர்வதேச விசாரணை வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் அதன் பொறுப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு உண்டு எனவும் அந்த அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படும் நிலையில், கடந்த இருபது வருடங்களாக அவரின் படுகொலை உட்பட 35 தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கும் காரணமான குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்ற உண்மையை மட்டக்களப்பு ஊடக அமைப்புகள் வேதனையோடும் விசனத்தோடும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

உலகுக்கு உண்மைகளை எடுத்தியம்பும் தங்களின் உன்னதமான - உயர்வான - பணியைத் துணிச்சலுடன் நிறைவேற்றிய ஒரே 'குற்றத்துக்காக' மட்டுமே அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஆனால், அவர்களின் படுகொலைகளுக்குப் பின்னால் புதைந்து கிடந்த உண்மைகள் இன்னும் வெளிக் கொணரப்படவேயில்லை. நீதி செய்யப்படவில்லை. பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படவில்லை. குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேயில்லை. தண்டனை விலக்களிப்பு என்ற கொடூரம் - சட்ட இழிநிலைமை - தங்கு, தடையின்றி, அரச கொள்கைப் போக்காகத் தொடருகின்றது.

இந்த விடயங்களை ஒட்டி சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள மட்டக்களப்பு ஊடக அமைப்புகள் இவ் விடயத்தை ஒட்டி வெளியிட்ட புள்ளி விவரங்களும் அவதானிக்கப்பட வேண்டியவை.

இலங்கையில் இன்று வரை 43 ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். இதில் 35 தமிழ் ஊடகவியலாளர்களும், 05 சிங்கள ஊடகவியலாளர்களும், 03 முஸ்லிம் ஊடகவியலாளர்களும் அடங்குகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் ஓர் ஊடகவியலாளரும், ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் இரு ஊடகவியலாளர்களும், சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் 13 ஊடகவியலாளர்களும், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 26 ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

1985ஆம் ஆண்டு தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகள் 2010ஆம் ஆண்டு வரை தொடர்ந்து கொண்டே இருந்தது.

இலங்கை அரசாங்கம் இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களின் படுகொலைகள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்த போதும் அதன் குற்றவாளிகள் கூட கைது செய்யப்படவில்லை.

அத்தோடு இந்த நாட்டில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் விடயத்தில் விசாரணைகளை இன்றுவரை அரசு முறையாக ஆரம்பிக்கவேயில்லை.

- இப்படி அந்த அமைப்புகள் சுட்டிக் காட்டுவது முற்றிலும் உண்மை.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்து, அதற்கு எதிராகப் பெரும் எடுப்பில் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து, ஏவிவிட்ட பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப்போக்கு அரசுகள், தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான படுகொலைக் கொடூரங்களையும் அத்தகைய அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்குள் அடக்கி, அதன் மூலம் தன்னளவில் அவற்றை நியாயப்படுத்தி, அவற்றுக்கு நீதி செய்ய மறுத்து நிற்கின்றன.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் கொடூரமாக கொன்றொழிக்கப்பட். - வலிந்து காணாமலாக்கப்பட்ட - பல பத்தாயிரம் தமிழ் மக்களுக்கு நீதி மறுக்கப்படுவது போல, தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் நீதி மறுக்கப்பட்டே வருகிறது.

ஊடக சுதந்திரம், கருத்துப் பரிமாற்ற உரிமை, ஒன்று கூடல் சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகள் பற்றி எல்லாம் வாய்கிழியப் பேசும் சர்வதேச சமூகம், இலங்கையில் இழைக்கப்பட்ட இந்த கொடூரங்களுக்கு எப்படி, எப்போது, எந்த வகையில் நீதி பெற்றுத் தரப் போகின்றது?





# சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கல்!

(பழுவூரான்)

தன்னாமுனை சூசையப்பர் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியத்தால் பாடசாலையின் 6,7,8 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வு புதன்கிழமை (29) கல்லூரியில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் ரவீந்திரா இக்னேசியஸ் ராஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பழைய மாணவர் ஒன்றியச் செயலாளர் மரியதாசன் சூசைதாசன் மற்றும் உபசெயலாளர் வேலாயுதம் புவிதாசன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு மூன்று தரங்களிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டோருக்குப் பரிசில்களை வழங்கினர்.









# மட்டக்களப்பு லியோ கழகத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொருளாதார ரீதியில் மிகவும் மோசமான நிலையில் பாடசாலைக் கல்வியைத் தொடரும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு மட்டக்களப்பு லியோ கழகத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு பிரதேச மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கடதாசிகள், பாவித்த அப்பியாசக் கொப்பிகள் மற்றும் கார்ட் போட் மட்டைகள் என்பவற்றை மீழ் சுழற்சி செய்து அதிலிருந்து கிடைத்த நிதி மூலம் முதற்கட்டமாக மாங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அண்மையில் பாடசாலை உபகரணங்கள், ஆடைகள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.



எதிர்காலத்தில் ஏனைய பிரதேச மாணவர்களுக்கும் இந்தத் திட்டம் தொடரும் எனவும், வறுமை காரணமாக மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடையில் கைவிட்டு பெற்றோருடன் கூலி வேலைகளில் ஈடுபடுவதனை எவரும் அனுமதிக்க முடியாது என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

எனவே இவ்வகையான பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு எல்லோரிடமும் உதவி கேட்க முடியாத நிலையிலுள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் தடையாக உள்ள காரணிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவ வசதிபடைத்தோர் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# கல்முனையில் கடல் அரிப்பை தடுக்க முதற்கட்ட வேலைகள் நேற்று ஆரம்பம்

(சர்ஜுன் லாபீர்)

கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளதால் அதனை தடுப்பதற்கு கடந்த வாரம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ், நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் அமைச்சின் செயலாளரும், கரையோரப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகமுமான ரணவக்க ஆகியோரை சந்தித்து உடனடியாக தடுப்பு அணைகளை கட்டுவதற்கான வேண்டுகோளை விடுத்தார்.

இதனை அடுத்து இந்த வேலைத் திட்டம் நேற்று (30)முதல் கட்டமாக வேலைகளை ஆரம்பிப்பதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கட்டுள்ளது.

கடலரிப்பு முதற்கட்ட வேலைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் கல்முனை கடற்கரைப் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, பிரதி ஆணையாளர் ஏ.எச் அசீம், பொறியியலாளர் ஏம்.ஜெ. ஜௌஸி, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் பி.டி ஜமால், 13 ஆம் வட்டார அமைப்பாளர் ஏ.பி ஜௌபர், கல்முனை பொதுப் பணி மன்றத் தலைவரும் பிரபல தொழிலதிபருமான எஸ்.எல்.அமீர், கரையோர மீனவர் சங்க பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பை தடுப்பதற்கு துரிதமாக செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸிக்கு கல்முனை மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினரால் சாய்ந்தமருது பிரதேசத்தில் ஏற்பட்ட கடலரிப்பை தடுப்பதற்கு உரிய தடுப்பணைகள் இடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தது.





# மருதமுனை நேஷனல் ஸ்டார் வி. கவுக்குக் காலணி வழங்கல்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் புதல்வர் றிஸ்லி முஸ்தபாவின் ஏற்பாட்டில் றிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி மற்றும் சமூக அமைப்பால் ஒரு தொகுதி காலணிகள் மருதமுனை நேஷனல் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கப்பட்டன.

நேஷனல் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க முதற்கட்டமாக இந்தக் காலணிகள் வழங்கப்பட்டன என்று றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.



இதன்போது அமைப்பின் செயலாளர் திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச். அல் ஜவாஹிர், பிரதித் தலைவர் சுகைல் ஜமால்டீன், ஆலோசகர் றிஜா மற்றும் கழக நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தச் சைக்கிள்கள் கையளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டை மேலோங்கச் செய்யும் நோக்கில் தூர இடங்களில் இருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்காக சர்வதேச நிறுவனமான கட்டார் சாரிட்டி நிதியுதவியுடன் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கட்டார் சாரிட்டி நிறுவன அம்பாறை மாவட்ட பங்காளர் நிறுவனமான கப்சோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களில் முதல் கட்டமாக சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது தேசிய பாடசாலையின் அதிபர் எம்.டி.எம் ஜனுபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கட்டார் சரிட்டியினுடைய பிரதானிகள், கப்சோ நிறுவன பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட், பாடசாலை முகாமைத்துவ குழு, பாடசாலை அபிவிருத்திக்குழு, கப்சோ ஊழியர்கள், தன்னார்வ தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கற்பிட்டி பிரதேசத்தில் பொது மலசலகூடம் நீண்ட கால தேவையாகக் காணப்படுகிறது

(கற்பிட்டி சியாஜ் )

கற்பிட்டி பிரதேசம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்கு வகிக்கும் ஒரு உல்லாச பயண சுற்றுலாத் தளமாகும்.

கற்பிட்டி பிரதேசத்தில் ஒரு பொது மலசல கூடம் இல்லாமையால் பொது மக்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

கற்பிட்டி பிரதேசத்துக்கு வெளி மாவட்டங்களில் இருந்து வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வருகை தருபவர்கள் தமது அத்தியவசிய இயற்கை தேவைகளைக் கற்பிட்டி நகரில் நிறைவேற்றிக் கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்தப் பொது மலசலகூட வசதி இன்மை பற்றி இதுவரை காலமும் பல்வேறு தரப்பினர் மத்தியில் எடுத்துரைக்கப்பட்டு வந்துள்ள போதும் இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அனைவரதும் அசமந்தப் போக்கின் காரணமாக, இதுவரை காலமும் பொது மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்படாமலேயே உள்ளது.

இந்த விடயத்தில் உரியவர்கள் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என்று வர்த்தகர்களும் பயணிகளும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



# மட்டு. புதுமண்டபத்தடி வீதியின் அவலம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தாண்டியடி புதுமண்டபத்தடி பிரதான வீதியில் இருந்து கரையாக்கன்தீவு கிராமத்துக் குச் செல்லும் முக்கிய வீதி மேடும் பள்ளமுமாகக் காணப்படுகிறது.

இந்த நிலையில் இந்த வீதியால் அதிகளவான பொது மக்கள் பயணித்து வருகின்றனர். வாகனச் சாரதிகள் இரவு நேரங்களில் வீதியால் பயணிப்பதற்கு பெரும் அச்சத்துடனே செல்ல வேண் டியுள்ளது.

இதனால் இந்த வீதியில் இரவு வேளையில் அதிகளவான விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்று கரையாக்கன் தீவு கிராம மக்கள் கவலை தெரிவிக் கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதி காரிகள் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# காரைதீவு விபுலானந்தா வீதியில் அமைந்துள்ள பாலத்தைத் திருத்துக

## கோரிக்கை விடுக்கின்றனர் மக்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விபுலானந்தா மத்திய கல்லூ ரிக்கு செல்லும் கார்பட் வீதியில் தோணா ஆற்றுக்கு மேலாகவுள்ள பாலம் பழுத டைந்து பல வருடமாகியும் இதுவரை திருத்தப்படாமல் உள்ளது.

எதிர்காலத்தில் பாரிய அனர்த்த மொன்று இதனால் ஏற்படலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி கார்பட் வீதியாகத் திருத் தம் செய்யப்பட்ட போது இது விடயமாக பலர் எடுத்துரைத்தும் அதனையும் பொருட்படுத்தாமல் இந்த வீதி செப்ப னிடப்பட்டது.

இந்தப் பாலத்தில் கனரக வாகனங் கள் செல்லும் போது பாலத்தில் அதிர்வை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட வீதி அபிவி ருத்தி திணைக்கள அதிகாரிகள் இந்தப் பாலத்தைத் திருத்தி இந்தப் பாலத்தின் ஊடாகப் பயமின்றிப் பயணிக்க உதவு மாறு மக்கள் கேட்டுள்ளனர்.



# மட்டு. மண் மீது பற்றுக் கொண்டவர் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன்

**(ஊடகவியலாளர் ஐ.நடேசன் சுட்டுக் கொலை செய்யப்பட்ட நினைவு நாள் (31) இன்றாகும்)**

2004இல் ஒட்டுமொத்த சர்வதேசமும் இலங்கையின் பால் தமது பார்வையைச் செலுத்திய நாள் இன்றாகும். படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக இன்று (31) நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுவது வழமை.

2004 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி, ஆயுதக் குழு ஒன்றின் உறுப்பினர்களால், ஊடகவியலாளர் நடேசன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

36 தமிழ் ஊடகவியலாளர்கள் இதுவரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலை தொடர்பாக எந்த விசாரணையும் இடம்பெறவில்லை என்பது மிகவும் ஒரு கவலைக்கிடமான விடயம்.

கடந்த காலத்தில் ஊடகவியலாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திப் படுகொலை செய்தார்கள். தற்போது நல்லாட்சியில் ஊடகவியலாளர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் ஒருவர் மீது நடத்தப்பட்ட வாள் வெட்டு பெரும் அச்சத்தையும் ஊடகவியலாளர்கள் மீதான பபாதுகாப்பின்மையையும் உணர்த்தி நிற்கின்றது.

நாட்டில் 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் 25 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றைச் சோர்ந்த க. தேவராசா வீரகேசரி ஊடகவியலாளர் மீது ஆரம்பிக்கப்பட்ட படுகொலை 2009 ஆண்டு சசிமதன் வரை 45 ஊடகவியலாளர்கள் படுகொலை செய் யப்பட்டனர்.

இந்த காலப் பகுதியில் பல ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் பல ஊடகவியலாளர் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.


நடராஜன் ஹரன்

ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை மேற் கொண்டு வந்ததுள்ள வரலாறு இருந்தபோதும் கடந்த நல்லாட்சி அரசு படுகொலை செய்யப்பட் ஊடகவியலாளர் தொடர்பில் இடம்பெற்ற விசாரணைகள் இன ரீதியாக பக்கச் சார்பாகவே இடம்பெறுகின்றது.

மட்டக்களப்பில் 2004 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி இனந்தெரியாதேரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் யாழ்ப்பாணத்தில் பிறந்திருந்தாலும் மட்டக்களப்பில் பல ஆண்டுகள் வாழ்ந்ததுடன், தமிழ் மக்கள் மீதும், அந்த மண் மீதும் அளப்பெரிய பற்றுக் கொண்டிருந்தார். அந்த மண்மீது கொண்ட பாசமே அவரை உண்மையின் குரலாக ஊடகங்களில் ஊடாக உலகுக்கு மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருந்தது.

நீண்ட காலம் ஊடகப் பணி செய்து அனுபவம் பெற்றிருந்த இவர், ஊடகத்துறையில் முழு நேரமாகப் பணியாற்றாது விட்டாலும், ஒரு முழுநேர ஊடகவியலாளன் ஆற்றும் பணிக்கு ஈடாக, அல்லது அதற்கு மேலாகவும் தனது ஊடப்பணியை அந்த காலகட்டத்தில் செவ்வனே ஆற்றி வந்தவர்.

மட்டக்களப்பு மக்கள் மட்டுமன்றி, இன அழிப்பை அதிகம் எதிர்கொண்ட தமிழ் மக்கள் மீதான



இனப்படுகொலைகள் பற்றிய விவரங்களை விரல் நுனியில் வைத்திருந்த இவர், அந்த மக்கள் நினைவு கூரப்பட வேண்டும் என்பதிலும், அவை வரலாற்று பதிவாக இடம்பெறவேண்டும் என்பதிலும் அந்தப் படுகொலை பற்றிய விவரங்களை ஏனையவர்கள், குறிப்பாக இளையோர் அறிந்திருக்க வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டிருந்தவர்.

இனப் படுகொலைகள் மட்டுமன்றி மட்டக்களப்பு பற்றி எப்பொழுது எந்தத் தகவல் கேட்டாலும் உடனே சொல்லும் ஆற்றல் கொண்டிருந்த இவர், சொல்வதுடன் நிறுத்தி விடாது அவற்றை ஆராய்ந்து தகவல் திரட்டி எழுதி பணியாற்றும் ஊடக மையங்களுக்கு தொலை நகலில் அனுப்பியும் வைப்பார்.

20 வருடங்களுக்கு மேலாக கொழும்பு வீரகேசரி பத்திரிகையின் செய்தியாளராகவும், 'நெல்லை நடேசன்' என்ற பெயரில் பத்தி எழுத்தாளராகவும் இருந்த இவர், ஐ.பி.சி. வானொலி, சக்தி தொலைக்காட்சி உட்பட ஏனைய பல ஊட கங்களுக்கு தனது இறுதி மூச்சுவரை பணி யாற்றியவர்.

ஏதாவது ஒரு முக்கிய விடயங்கள் பற்றி ஊடகங்கள் கேட்க மறந்து விட்டால் கூட, அதனை ஞாபகம் ஊட்டி உடனே அனுப்பி வைப்பார். எதனையும் நேருக்கு நேர் பேசும் இவரது நடைமுறை காரணமாக, உண்மையை அல்லது மக்களுக்குப் பாதகமான விடயங்களைக் ஆராயும் இவரது குணாம்சம் காரணமாக, பல தடவைகள் பல்வேறு எதிர்புகளையும், இன்னல்களையும் எதிர்கொண்டவர்.

இவரது பணிக்கு சாகித்திய விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது (2000), ஆளுநர் விருது போன்ற பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டமை, அவரது ஊடகப் பணிக்கு கிடைத்த சான்றுகளாகும். இவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் கூட தனது தலைசிறந்த ஊடகப் பணிக்காக மதிப்பளிக்கப்பட்டவர்.

பல தடவைகள் நேரடியாகவும், தொலைபேசி ஊடகவும் கொலை மிரட்டல், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த போதிலும், ஏன் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் (2000ஆம் ஆண்டு) இடம்பெற்ற போதிலும்கூட, அஞ்சாது தனது குடும்பத்துடன் இறுதிவரை மட்டு. மண்ணில் இருந்து மக்களுக்காகக் குரல் கொடுத்த ஒரு சிறந்த ஊடகப் பணியாளர் என்

தொடர்ச்சி▼

# மட்டு. மண் மீது பற்றுக் கொண்டவர் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன்

**தொடர்ச்சி▲**

பதற்கு அப்பால் ஊடக பற்றாளன் என்றே கூறவேண்டும்.

மட்டக்களப்பில் இலங்கை படையினரது கட்டுப்பாட்டில் இருந்த நகர் பிரதேசத்தில் வாழ்ந்த போதிலும், அன்று போர் இடம் பெற்ற பகுதியில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது பிரச்சினைகளையும், இன்னல்களையும் தென் தமிழ் ஊடகவியலாளர்களுடன் நேரடியாக அங்கு சென்று அங்குள்ள மக்களின் குரல்களை வெளிக்கொண்டுவந்து உலகுக்குக் தமிழ் குரலாக தெரியப்படுத்தி பெரும் பங்காற்றி வந்தவர்.

பல இக்கட்டான காலங்களில்கூட இவர் போன்ற ஊடகவிலாளர்கள் மக்களுக்காகவும், அவர்களில் நல்வாழ்வுக்காகவும், உரிமைகளுக்காவும் ஆற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகளை உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் யாரும் மறந்துவிடக் கூடாது.

ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன், மாமனிதர் சிவராம், மயில்வாகன் நிமலராஜன், லசந்த விக்கிரதுங்க என டிச்சர்ட் டி சொய்சாவரை முப்பதுக்கும் மேற்பட்ட ஊடகர்கள் இதுவரை படுகொலை செயப்பட்டுள்ளனர்.

இவர்களைப் படுகொலை செய்தவர்கள் யார்? ஏன், அவர்கள் தண்டிக்கப்படவும் இல்லை?. இழக்கப்பட்ட உயிர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவும் இல்லை?. பாதிக்கப்பட்ட அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடுகள் கிடைத்தனவா? போன்ற அடுக்கடுக்கான கேள்விகள் எழுத்த வண்ணமே உள்ளன.

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின், ஊடக அறிவுக்கு அவரது இந்த நினைவு நாளில் நன்றி தெரிவிக்கும் அதேவேளை, அவரது இழப்புக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதுடன், ஊடகத்துறையில் உயிர் நீத்தோருக்கு எமது இதயபூர்வ அஞ்சலியை காணிக்கையாக்குவேம்.



# முத்துநகர் மக்கள் காணிகளை எவரும் அபகரிக்க இடமளியோம்

## இம்ரான் மஹ்ரூபின் எம்.பி. தெரிவிப்பு

**(ஹஸ்பர்)**

முத்துநகர் மக்கள் காணிகளை அடாத்தாக எவரும் அபகரிக்க ஒரு போதும் இடமளிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை முத்துநகர் கிராம மக்களின் குடியிருப்பு, விவசாய காணிகளை வெளிநாட்டுக்கு மற்றும் தனியார் நிறுவனத்துக்கு இலங்கை துறைமுக அதிகார சபையின் மூலம் வழங்கப்பட உள்ளது என்று முத்துநகர் கிராம மக்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதற்கு துக்க அமைவாக முத்துநகர் கிராமத்துக்குச் சென்று பொது மக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் நடத்தியிருந்தார்.

இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது மாவட்ட பூர்வீக காணிகளையும் நமது மக்கள் வாழ்ந்துவரும் நிலத்தையும் நமது மக்களின் வாழ்வாதார விவசாய காணிகளையும் வெளிநாட்டவர்களுக்கு கூறு போட்டு விற்கும் அரசின் ஒரு சதித்திட்டமாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

இன்று பல தசாப்தங்களாக மக்கள் வாழ்ந்துவரும் முத்துநகர் கிராமம் போன்ற மக்களுக்கு, அரசால் ஒரு குடும்பத்துக்கு சொந்தமாக 10 பேர்ச் காணித்துண்டு வழங்க முடியாத இந்த அரசு, தற்போது வெளிநாட்டவர்களுக்கு அபிவிருத்தி என்ற பெயரில் 100 ஏக்கர் காணியை நீண்ட கால குத்தைக்கு வழங்கத் திட்டமிட்டு வருகிறது.

மக்களின் பூர்வீகக் காணிகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புடன் நான் பல்வேறு பட்ட முன்னெடுப்புகளை செய்து வருகின்றேன். அதில் ஒரு அங்கமாக நேற்றுமுன்தினம் (29) திருகோணமலை மாவட்ட இலங்கை துறைமுக அதிகார சபையின் பிராந்திய முகாமையாளர் வீரசிங்கவை நேரில் சந்தித்து, முத்துநகர் நகர் மற்றும் வராயா குடியிருப்பு காணிகள் தொடர் பாகவும் கலந்துரையாடினேன்.- என்றார்.



# போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி என்னும் தொனிப்பொருளில் மரதனோட்டம்!

(வாஸ் கூஞ்ஞ)

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம் என்னும் தொனிப்பொருளில் கவனவீர்ப்பு மரதனோட்டப் போட்டியை மன்னாரில் நடத்தியது.



சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 'போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம், வலுவான தேசம் ஒன்றை நிதமும் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப் பொருளில் மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மன்னாரில் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டியை நடத்தியது.

இந்தப் போட்டியானது இன்று வெள்ளிக்கிழமை (31) காலை 7 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு தாராபுரம் மற்றும் கீரி என்னும் கிராமங்கள் ஊடாக மீண்டும் மன்னார் மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்டச் செயலக அரச அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

முதல் 10 இடங்களுக்குள் வந்த வீரர்களுக்கு சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் அரச அதிபரால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம உள்ளக கணக்காய்வாளர், திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி திணைக்கள முகாமையாளர், சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தில் சைக்கிள் ஓட்டம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டுக் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர்கள் அமைப்பான ஸஹிரியன் 90 அமைப்பினர் இன்று (31) விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை முன்றலில் இருந்து ஆரம்பமான சைக்கிள் ஓட்டம், கல்முனை–அக்கரைப்பற்று பிரதான வீதியினூடாக அட்டப்பள்ளம் வரை சென்று மீண்டும் ஆரம்பித்த இடத்தை அடைந்தது.

செல்லும் வழியில் புகைத்தலால் ஏற்படும் தீங்கு பற்றிய கையேடுகளைப் பொது மக்களின் விழிப்புணர்வுக்காக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனைக்குடி சமுர்த்தி வலயத்தில் புகைத்தல், போதை எதிர்ப்பு விழிப்பூட்டல்

(எம்.எம்.றம்ஸீன்)

2024 ஆம் ஆண்டின் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத் தின விழிப்பூட்டல் மற்றும் நிதி சேகரித்தல் என்பன கல்முனை பிரதேச செயலக கல்முனைக்குடி சமுர்த்தி வலயத்தில் வங்கி முகாமையாளர் யூ.கே. சிராஜ் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வங்கி பிரதி முகாமையாளர், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பிரதான நிகழ்வைத் தொடர்ந்து ஏனைய ஒவ்வொரு பிரிவுகளிலும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பங்கு பற்றலுடன் ஆரம்ப நிகழ்வு இடம் பெற்றது. "வலுவான தேசம் ஒன்றை நிதமும் கட்டி எழுப்புவோம்" எனும் தொனிப் பொருளில் சமயத் தலைவர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்கள் மற்றும் அங்கத் தவர்களின் பங்களிப்புடன் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப் பட்டது.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GSM GUNAAM'S SUPERMARKET
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# சர்வமதப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் கிழக்கில்!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

தேசிய சமாதான பேரவையின் சர்வ மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு தொடர்பாக மட்டக்களப்பு மற்றும் பண்டாரவளை பிரதேசங்களது சர்வமத பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் மட்டக்களப்பில் நடைபெற்றது.

தேசிய சமாதான பேரவையுடன் மட்டக்களப்பு மாவட்ட வண்ணாத்திப்பூச்சி சமாதான பூங்கா இனணந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேசத்தில் முன்னெடுத்துள்ள பல் சமய தலைவர்களுடான இன ஐக்கிய செயற்றிட்டத்தின் 'மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு' எனும் செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச சர்வ சமயக் குழுக்களின் பங்களிப்பு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அதன் ஒரு செயற்பாடாகப் பதுளை மாவட்டம், பண்டாரவளை பிரதேச சர்வ சமயக் குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மூன்று நாள் விஜயமாக சமய சகவாழ்வை கட்டியெழுப்பும் நோக்கில் மட்டக்களப்பு சர்வ சமயக் குழுக்கிடையிலான அனுபவ பரிமாற்றம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

தற்போதைய அரசியல் சூழ் நிலையில் இனங்களுக்கு இடையில் தீர்க்கப்படாத முரண்பாடுகள் போன்ற சமூக மட்ட கட்டமைப்பை உருவாக்குவதை நோக்காக கொண்டு தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பவேண்டிய செயற்றிட்டம் தொடர்பாகவும் நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு வண்ணாத்திப்பூச்சி சமாதான பூங்காவின் திட்டமுகாமையாளரும், பிரதேச சர்வ மத குழு ஒருங்கிணைப்பாளருமான டி. நகுலேஸ்வரன், பண்டாரவளை பெண்கள் அபிவிருத்தி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் சந்திரா வெத கெதர ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இலங்கை தேசிய சமாதனப் பேரவையின் தேசிய இணைப்பாளர் எம்.உவைஸ் தலைமையில் இது இடம்பெற்றது.

கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், பண்டாரவளை பிரதேச செயலாளர், இரேஷ் ரத்நாயக்க, மண்முனை பற்று, காத்தான்குடி, மண்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலாளர்கள், பண்டாரவளை, மட்டக்களப்பு பிரதேச சர்வமத தலைவர்கள், பண்டாரவளை மட்டக்களப்பு பிரதேச சர்வமத பிரதிநிதிகள், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.







# கன்னியாகுமரிவிவேகானந்தர் மண்டபத்தில் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து தியானம்

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

பிரதமர் நரேந்திர மோடி தியானம் செய்வதால் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி முழுவதும் பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. கன்னியா குமரி விவேகானந்தர் மண்டபத்தில் பிரதமர் நரேந்திர மோடி இன்று 2 ஆவது நாளாக தியானம் செய்கின்றார். நாளை அதை நிறைவு செய்து விட்டு அவர் புதுடில்லிக்குப் செல்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் நாளை (சனிக்கிழமை) முடிவடையும் நிலையில் கன்னியாகுமரி கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் மண்டபத்தில் 3 நாள்கள் தியானம் செய்ய பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்தார்.

அதற்காக அவர் புதுடில்லியில் இருந்து விமானம் மூலம் நேற்று வியாழக்கிழமை மாலை கன்னியாகுமரிக்கு வந்தார். முதலில் பகவதி அம்மன் கோவிலில் பிரதமர் நரேந்திர மோடி தரிசனம் செய்தார். தமிழக பாரம்பரிய உடையான வேட்டி அணிந்தபடி பிரதமர் நரேந்திர மோடி இருந்தார். உடலில் சால்வையும் அணிந்திருந்தார்.

அதன்பிறகு கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் தியான மண்டபத்துக்கு சென்று பிரதமர் நரேந்திர மோடி தியானத்தைத் தொடங்கினார். அவர் அங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் வரை 3 நாள்கள் தங்கியிருந்து தியானம் செய்கிறார். இந்த தியான நிகழ்ச்சி முடிந்ததும் பிரதமர் மோடி 133 அடி உயர திருவள்ளுவர் சிலைக்கு சென்று மரியாதை செலுத்துகிறார்.

பிரதமர் நரேந்திர மோடி தியானம் செய்கின்றமையால் கன்னியாகுமரி முழுவதும் பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. விவேகானந்தர் மண்டபம் பகுதியில் துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. புதுடில்லியில் இருந்து வந்துள்ள பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகளும் கன்னியாகுமரியிலும், விவேகானந்தர் மண்டபத்திலும் முகாமிட்டுப் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் 2 ஆவது நாளாக இன்று வெள்ளிக்கிழமை பிரதமர் நரேந்திர மோடி தியானம் மேற்கொண்டு வருகிறார். இது குறித்த படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. அதிகாலையில் தியானத்திற்கு முன் பிரதமர் நரேந்திர மோடி சூரிய உதயத்தை கண்டுகளித்து சூரிய பகவானை வணங்கினார். பின்னர் சுவாமி விவேகானந்தர் மண்டபத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் நடந்து சென்றபடி பிரதமர் நரேந்திர மோடி பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து பிரதமர் மோடி தியானத்தை தொடங்கினார்.

இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை கன்னியாகுமரியில் சுவாமி விவேகானந்தர் மண்டபத்தில் தியானம் செய்யும் அவர் நாளை ஜூன் முதலாம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு தியானத்தை நிறைவு செய்துவிட்டு புறப்படுகிறார். மாலை 3.10 மணிக்கு விவேகானந்தர் மண்டபப் படகுத்துறையில் இருந்து தனிப்படகில் புறப்பட்டு மாலை 3.20 மணிக்கு கன்னியாகுமரி அரசு விருந்தினர் மாளிகையில் உள்ள ஹெலிப்பேட் செல்கிறார். அங்கிருந்து மாலை 4.05 மணிக்கு திருவனந்தபுரம் விமான நிலையம் புறப்பட்டு செல்கிறார். முன்னதாக திருவள்ளுவர் சிலைக்கும் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவிடத்தில் 45 மணி நேரம் 25 நிமிடங்கள் பிரதமர் நரேந்திர மோடி தங்கியிருக்கிறார்.

விவேகானந்தர் மண்டபத்தில் உள்ள மூன்று அறைகள் அவருக்காக தயார் செய்யப்பட்டிருந்தன. இவற்றில் ஒன்றில் அவர் தங்கும் வகையில் புதிதாக 2 கட்டில்கள், சாய்வு நாற்காலி போன்றவை வைக்கப்பட்டுள்ளன. புதிதாகக் குளிரூட்டி ருத்தப்பட்டுள்ளது. அங்குள்ள மற்றொரு அறையில் சமையல் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. மோடிக்கு தேவையான உணவு அங்கு தயார் செய்து வழங்கப்படுகிறது. அடுத்துள்ள அறை பிரதமரின் அலுவலகமாக செயல்படும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவை தவிர விவேகானந்தர் மண்டபத்தில் உள்ள தியான கூடத்தில் மோடி தியானம் செய்யவும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன..

பிரதமர் நரேந்திர மோடி தியானத்துக்காக கன்னியாகுமரி நகரமே போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. கடல், வான், தரை பகுதியிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமர் தங்கும் விவேகானந்தர் நினைவிடம், படகுத்துறைகள், ஹெலிபேட் தளம் ஆகியன முழுமையாக பாதுகாப்பு வளையத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் மண்டபம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுமதிக்கப்படவில்லை. அவர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. தமிழ்நாடு கடலோர காவல்படை ஏடிஜிபி சந்தீப் மிட்டல் தலைமையில் ஐஜி கண்ணன், டிஐஜி பிரவேஷ்குமார், குமரி மாவட்ட எஸ்.பி சுந்தரவதனம், கடற்படை, எஸ்பிஜி அதிகாரிகள், மத்திய பாதுகாப்பு படை பிரிவுகள் கன்னியாகுமரியில் முகாமிட்டுள்ளனர். விவேகானந்தர் பாறையில் எஸ்பிஜி, கடற்படை மற்றும் தமிழ்நாடு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் 'மார்க்கோஸ்' எனப்படும் கடல் செயல்வீரர் படை வீரர்கள் 30 பேர் தயார் நிலையில் உள்ளனர். இதனை போன்று கடலில் மூழ்கி வெளியே வருவதில் திறன்படைத்த உள்ளூர் மீனவர்கள் 10 பேர் தயார்படுத்தப்பட்டுள்ளனர். காந்திமண்டபம் உள்ளிட்ட இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. கடற்படை வீரர்கள் சர்வதேச கடல் எல்லையில் ரோந்து சுற்றி வருகின்றனர். கடலோர காவல் படையின் மூன்று கப்பல்கள் கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையை சுற்றி 12 நாட்டிக்கல் மைல் தொலைவில் முகாமிட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளது. இவற்றில் 164 வீரர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதிவேக ரோந்து படகுகள் 4ம், தமிழ்நாடு மரைன் போலீஸ் பிரிவை சேர்ந்த 160 போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 6 விரைவு ரோந்து படகுகளும் கன்னியாகுமரி கடல் பகுதிகளை சுற்றிலும் 24 மணி நேரமும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. இதனை போன்று கன்னியாகுமரி கடற்கரை பகுதிகளை வான்வெளியில் ஹெலிகாப்டர்கள் மூலம் கண்காணிக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. பிரதமர் மோடி விவேகானந்தர் மண்டபத்தில் தங்கியுள்ளதால் கன்னியாகுமரி கடல் பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# டொனால்டு டிரம்ப் குற்றவாளி!

## ஆபாச பட நடிகைக்கு பணம் கொடுத்த வழக்கில் 34 குற்றச்சாட்டுகளுமே உண்மை என்று அறிவிப்பு

அமெரிக்க வரலாற்றில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட முதல் முன்னாள் ஜனாதிபதி என்ற மோசமான பெயரை டொனால்ட் ட்ரம்ப் பெற்றுள்ளார்.

டிரம்பிற்கு எதிரான 34 குற்றச்சாட்டுகளும் உண்மை என, அமெரிக்க நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வழக்கில் ஜுலை 11 ஆன் திகதி தண்டனை விவரங்கள் அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் அமெரிக்க வரலாற்றில் குற்றவியல் தண்டனை பெற்ற முதல் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி என்ற மோசமான வரலாற்றுப் பெயரை ட்ரம்ப் பெற்றுள்ளார்.

அதேவேளை ட்ரம்ப் மீண்டும் தேர் தலில் போட்டியிடுவதற்கான பரப்புரையில் ஈடுபட எந்தத் தடையும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்பிற்கு எதிரான சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கில், அவர் மீதான அனைத்துக்குற்றச்சாட்டுகளும் உண்மை என நியூயோர்க் நடுவர் மன்றம் அறிவித்துள்ளது.

ஐந்து மாதங்களில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் ட்ரம்ப் மீண்டும் பதவியை பிடிக்க போட்டியிடவுள்ளார். இந்த சூழலில் டிரம்ப் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு இருப்பது அவருக்கு பெரும் பின்னடைவாகஜ் கருதப்படுகிறது.



ஆபாச நட்சத்திரமான ஸ்டோர்மி டேனியல்ஸை அமைதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட பண விவரத்தை, மறைப்பதற்காக வணிகப் பதிவுகளை பொய்யாக்கிய 34 குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு குற்றச்சாட்டிற்காகவும் அவருக்கு தலா 4 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்படமால் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே, தீர்ப்பை எதிர்த்து ட்ரம்ப் மேல்முறையீடு செய்ய திட்டமிட்டுள்ளார்.

அதேவேளை ட்ரம்ப் குற்றவாளி என அறிவிக்கப்பட்டதை ஜனதிபதி பைடன் தரப்பு வரவேற்றுள்ளது.

சட்டத்திற்கு மேலானவர்கள் என யாரும் இல்லை. முன்னெப்போதும் இல்லாத அளவில் நமது ஜனநாயகத்திற்கு ட்ரம்ப் ஆபத்தானவராக இருக்கிறார். டொனால்ட் ட்ரம்ப் எப்போதுமே தனது ஆதாயத்திற்காக சட்டத்தை மீறுவதால் விளைவுகளை சந்திக்க மாட்டார் என்று தவறாக நம்புகிறார். ஆனால் இன்றைய தீர்ப்பு அமெரிக்க மக்கள் ஒரு எளிய யதார்த்தத்தை எதிர்கொள்வதை மாற்றவில்லை என பைடன் தரப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

விஸ்கான்சினில் உள்ள மில்வாக்கியில் ஜுலை 15 ஆம் திகதி குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற உள்ளது. அதில், நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனுக்கு எதிரான, கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்ப் முறையாக பரிந்துரைக்கப்பட உள்ளார்.

இந்த நிலையில், அதற்கு நான்கு நாள்களுக்கு முன்னதாக ஜூலை 11ஆம் திகதி ட்ரம்பின் தண்டனை விவரம் அறிவிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுடப்பட்ட சுலோவேகியப் பிரதமர் தற்போது உடல் நலம் தேறுகிறார்



பிராடிஸ்லா,மே31

துப்பாக்கியால் சுடப்பட்டு, கடந்த 2 வாரங்களாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் சுலோவேகியப் பிரதமர் தற்போது உடல் நலம் தேறியுள்ளார்.

ஐரோப்பிய நாடான சுலோவேகியாவின் பிரதமர் ராபர்ட் பிகோ (வயது 59). இவர் அங்குள்ள ஹேண்ட்லோவா நகரில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது கூட்டத்தில் கலந்து கொண்ட மர்ம நபர் ஒருவர் திடீரென பிரதமர் ராபர்ட் பிகோ மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதில் படுகாயம் அடைந்த அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்தனர்.


இதற்கிடையே துப்பாக்கியால் சுட்டவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த 2 வாரங்களாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் சுலோவேகியா பிரதமர் தற்போது நலமுடன் இருக்கின்றார் எனத் துணை பிரதமரும், பாதுகாப்பு துறை மந்திரியுமான ராபர்ட் கலினாக் (வயது 71) தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் - 5

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 31/05/2024

## பில்லியனருக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டு!



கியூபெக், மே 31
ஃபியூச்சர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் பில்லியனர் ராபர்ட் C2 ▶

# உலகத் தமிழர் பேரவையில் இருந்து விலகுகிறது கனடியத் தமிழர் பேரவை

GLOBAL TAMIL FORUM
உலகத் தமிழர் பேரவை

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

**ஒன்ராரியோ, மே 31**

**உலகத் தமிழர் பேரவையில் இருந்து விலகுவதாக கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

**கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களுக்கு இந்த தகவல் மின்னஞ்சல் மூலம் பகிரப்பட்டுள்ளதாக இணையத்தில் வெளியாகிய மின்னஞ்சலின் புகைப்படப் பிரதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**கனடியத் தமிழர் பேரவையின் நிர்வாக பணிப்பாளர் டான்ரன் துரைராஜாவினால் கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் ஊடாக இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.**

நீண்ட பரிசீலனையின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்த மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை எங்களின் பணியில் கவனம் செலுத்துதலை உறுதி செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது எனவும் கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

ஆனாலும் இந்த முடிவுக்கான காரணம் எதுவும் அந்த மின்னஞ்சலில் பகிரப்படவில்லை.

உலக தமிழ் பேரவையுடன் இணைந்து கனடிய தமிழர் பேரவை முன்னெடுத்த இமாலய பிரகடனம் குறித்த எதிர்ப்பு காரணமாக கனடிய தமிழர் பேரவை உலக தமிழ் பேரவையின் உறுப்பினர் நிலையில் இருந்து விலகவேண்டும் என கடந்த பல மாதங்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## யூத நிறுவனங்களின் சுற்றாடலில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்!

ஒன்ராரியோ, மே 31

ஒரு வாரத்தில் இரண்டாவது முறையாக கனடாவில் உள்ள யூதப் பாடசாலையில் தோட்டா துளைத்த குழிகள் கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து, தங்கள் சமூகங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு யூத வாதிடும் அமைப்புகள் வியாழனன்று அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

ரொறொன்ரோ யூத பெண்கள் பள்ளியும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சில நாள்களுக்குப் பிறகு, பெருநகரத்தில் உள்ள யூதப் பள்ளி மற்றும் ஜெப ஆலயம் உள்ள கட்டடம் ஆகியன துப்பாக்கிச் சூட்டில் தாக்கப்பட்டது எனக் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மொன்ரியல் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

இந்த சம்பவங்களிலும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



## கனடாவிலேயே மிகப்பெரிய தடுப்பூசி தயாரிப்பு நிறுவனம்

### டொரன்டோவில் திறக்கப்படும் என்கிறார் பிரதமர்

ஒன்ராரியோ, மே 31

கனடாவின் மிகப்பெரிய தடுப்பூசி தயாரிப்பு நிறுவனம் டொரன்டோவில் திறக்கப்படவுள்ளதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 பெருந்தொற்றின் பின்னர் உள்நாட்டு தடுப்பூசி உற்பத்தித் துறையை உருவாக்கும் கனடாவின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தத் தடுப்பூசி தயாரிப்பு நிறுவனம் அமைகிறது.

இந்த புதிய சனோப்பி தயாரிப்பு நிறுவனம் கனடாவிலேயே மிகப்பெரிய தடுப்பூசி தயாரிப்பு நிறுவனமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் மூலம் உள்நாட்டு தடுப்பூசி உற்பத்தியை பெருமளவில் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



# ட்ரம்ப் கனடாவிற்குள் வர முடியுமா? குற்றவாளிக்கு அனுமதி இல்லையாம்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவிற்குள் பிரவேசிக்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க மென்ஹட்டன் நீதிமன்றில் டிரம்ப் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ட்ராம்பிற்கு எதிரான 34 குற்றச்சாட்டுகள் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டுள்ளன.

கனடாவின் சட்டங்களின் பிரகாரம் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட குற்றவாளி ஒருவர் நாட்டுக்குள் பிரவேசிக்க முடியாது. கனடிய குடிவரவு சட்டத்தரணி மாரியோ பெலிசினோ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஆபாச நடிகை ஒருவருடன் பேணிய தொடர்பினை மூடி மறைப்பதற்காக ட்ராம்ப் பணம் வழங்கிய விவகாரம் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் போது இந்த தகவல் கசிய விடப்படவிருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

ஆபாச நடிகையுடன் பேணிய தொடர்பு குறித்த தகவல்கள் வெளியானால் தமது தேர்தல் வெற்றி பாதிக்கும் எனக் கருதி ட்ராம்ப் பெண்ணுக்கு பணம் கொடுத்து இந்தத் தகவல்கள் வெளிவருவதனை மூடி மறைத்தார் என தெரிவிக்கப்படுகிறது.

மோசடியான வர்த்தக ஆவணங்களை தயாரித்தார் என ட்ரம்ப் மீது குற்றம் சுமத்தப்பட்டு இருந்தது.

எதிர்வரும் ஜுலை மாதம் 11 ஆம் திகதி ட்ராம்பிற்கு எதிரான வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட உள்ளது.

குற்றவாளி ஒருவர் சட்டத்தின் பிரகாரம் கனடாவிற்குள் பிரவேசிக்க முடியாது என சட்டத்தரணி மாறியோ தெரிவித்துள்ளார்.




# 2.4 ட்ரில்லியன் டொலர்கள் கடன் கனடியர்கள் செலுத்த வேண்டுமாம்

கனடியர்கள் பாரிய அளவு கடன் தொகையை செலுத்த வேண்டி இருப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

ட்ரான்ஸ் யூனியன் என்னும் நிறுவனத்தினால் இந்த கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாகனம், அடகு கடன் மற்றும் கடன் அட்டை போன்றவற்றிற்காக செலுத்தப்பட வேண்டிய மொத்த கடன் தொகை 2.4 ட்ரில்லியன் டொலர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் கடன் அட்டை பயன்படுத்தும் கனடியர்களில் 10 வீதமானவர்கள் மாதாந்த குறைந்தபட்ச தொகையை மட்டும் செலுத்துகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பணவீக்கம் போன்ற ஏதுக்களினால் இவ்வாறு கனடியர்கள் கடன்களை திருப்பி செலுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடன் செலுத்துவதற்கு சிரமங்களை எதிர் நோக்கும் கனடியர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக ட்ரான்ஸ் யூனியன் ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் மேத்யூ ஃபேபியன் தெரிவிக்கின்றார்.

கனடிய வாடிக்கையாளர்கள் பொருளாதார சுமையை உணர்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண வீக்கம் மற்றும் வட்டி வீத அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணிகளினால் இவ்வாறு மக்கள் கடன் சுமை அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வருமானத்திற்கும் செலவுகளுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு பல குடும்பங்கள் கடன் அட்டையை பயன்படுத்திக் கொள்கின்றன என அவர் தெரிவிக்கின்றார்.

**பில்லியனருக்கு...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மில்லரை மொன்ரியல் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

10 புகார்தாரர்கள் சம்பந்தப்பட்ட பாலியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள, அவர்களில் பலர் மைனர்களாக இருந்தனர்.

1994 மற்றும் 2016 க்கு இடையில் பாலியல் வன்கொடுமை, பாலியல் குறுக்கீடு மற்றும் ஒரு நபரை விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல் உள்ளிட்ட 21 குற்றச் செயல்கள் நடந்ததாக பொலிஸார் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவிதத்துள்ளனர்.




# கனடாவில் 48 ஆயிரம் வாகனங்களை மீளப் பெறுகின்றது நிசான் நிறுவனம்!

கனடாவில் நிசான் ரக வாகனங்களை பயன்படுத்துவோருக்கு அந்த நிறுவனம் எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நிசான் நிறுவனத்தின் குறிப்பிட்ட சில வாகனங்களை மீள பெற்றுக் கொள்வதாக அது அறிவித்துள்ளது.

சுமார் 48,000 வாகனங்கள் இவ்வாறு மீள பெற்றுக் கொள்ளப்பட உள்ளன என அறிவிக்கப்படுகிறது.

வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ஏர் பேக்களில் (AirBags) காணப்படும் குறைபாடுகள் காரணமாக இவ்வாறு சில மொடல் வாகனங்கள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் வெப்ப நிலை காரணமாக இந்த ஏர் பேர்கள் சேதமடைந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

டகாடா ஏர் பேக் (Takata airbags) வகைகளே இவ்வாறு சேதமடைந்து இருக்கலாம் எனக் கூறப்பட்டது..

கடந்த டிசம்பர் மாதம் போர்ட் வாகன நிறுவனமும் ஏர் பேக் பிரச்சினை காரணமாக சுமார் 2,75,000 வாகனங்களை மீளப் பெற்றுக் கொள்வதாக அறிவித்திருந்தது.

அமெரிக்காவில் சுமார் 6.2 மில்லியன் வாகனங்கள் ஏர்பேக் பிரச்சனைகளுடன் வீதிகளில் செலுத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிசான் நிறுவனத்தின் 2002 QX4, 2002-2004 Pathfinder and 2002-2006 Sentra t ரக வாகனங்கள் இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரக வாகனங்களை செலுத்தாது நிசான் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவிற்கு வெளியே பிறந்திருந்தாலும் கனேடியர்களின் பிள்ளைக்குக் குடியுரிமை

## புதிய சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் தாக்கல்




கனடாவிற்கு வெளியே பிறந்த கனேடியர்களின் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்க அனுமதிக்கும் சட்டம் மீண்டும் நடைமுறைக்கு வர உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடியுரிமை வழங்கப்படும் சட்டத்தை வம்சாவளியின் அடிப்படையில் கனேடிய அரசாங்கம் நடைமுறைக்கு கொண்டு வருவதற்காக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதிய குடிமக்களை சேர்க்கும் வகையில் குடிவரவு அமைச்சர் மார்க் மில்லரினால் இந்த சட்டம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய கனேடிய பிரஜைகளின் குழந்தை வெளிநாட்டில் பிறந்தாலும், கனேடிய குடியுரிமை வழங்கப்படும் எனச் சட்டம் மாற்றி அமைக்கப்படவுள்ளது.

கனடாவில் குடியுரிமை வழங்க புதிய சட்டம் தமிழர்களுக்கு கிடைக்கவுள்ள நன்மை | New Law To Grant Citizenship In Canada

2009 ஆம் ஆண்டில், முன்னாள் கன்சர்வேடிவ் கட்சியின் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரின் அரசாங்கம் சட்டத்தை மாற்றியது.

இதனால் வெளிநாட்டில் பிறந்த கனேடிய பெற்றோர்கள் தங்கள் குழந்தை கனடாவில் பிறக்காத வரை அவர்களின் குடியுரிமையை வழங்க முடியாது. இந்த நடைமுறை புதிய சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கனடாவில் வாழும் தமிழர்களுக்கு வெளிநாடுகளில் பிள்ளைகள் பிறந்தாலும் அவர்கள் கனேடிய பிரஜைகளாக கருதப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# போதை மருந்து பயன்பாட்டால் ஏற்படும் மரணங்கள் ரொறன்டோவில் அதிகரிப்பு

கனடாவின் ரொறன்டோவில் போதை மருந்து பயன்பாட்டினால் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குறிப்பாக கோவிட் பெருந்தொற்றுக் காலத்தின் பின்னர் அதிக எண்ணிக்கையில் போதை மறந்து பயன்பாட்டு மரணங்கள் பதிவாகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் ரொறன்டோ நகரில் 523 பேர் மிதமிஞ்சிய அளவில் போதை மருந்து பயன்படுத்தியதனால் உயிரிழந்துள்ளனர்.

இது கோவிட் பெருந்தொற்று ஏற்படுவதற்கு முன்னர் இருந்த நிலையிலும் 74 வீத அதிகரிப்பாகும்.

உயிரிழந்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் 25 முதல் 44 வயது வரையிலானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ரொறன்டோவில் ஆபத்தான போதை மருந்து விநியோகம் அதிகரித்துள்ளதாகவும், இது சட்டவிரோதமான செயல்பாடு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மிதமிஞ்சிய அளவில் போதை மாத்திரைகளை எடுத்துக் கொள்ளும் போது ஏற்படும் விபத்துக்கள் காரணமாக அதிக அளவு மரணங்கள் பதிவாகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.




# மொன்ரியல் வளாகத்தில் கூடாரங்களை அகற்றப் போராட்டக்காரர்கள் தீர்மானம்

## நிர்வாகத்துடனான பேச்சில் இணக்கமாம்

கியூபெக், மே 31

கியூபெக் பல்கலைக்கழகத்தின் மொன்ரியல் வளாகத்தில் உள்ள பலஸ்தீன ஆதரவு கூடாரங்களை அகற்றுவதற்கு தீர்மானித்துள்ளனர் எனப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புல்கலைக்கழக நிர்வாகத்துடான பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்தமையே இதற்கான காரணம் என ஒழுங்கமைப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஏறக்குறைய மூன்று வாரங்கள் பல்கலைக்கழக வளாகத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்த பின்னர், முகாமில் ஈடுபட்டுள்ள ஆர்வலர் குழு ஒன்று புதன்கிழமை பல்கலைக்கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை 'வரலாற்று வெற்றி' என்று அறிவித்திருந்தது.

மே 12 அன்று முகாம் தொடங்கியதில் இருந்து, எதிர்ப்பாளர்கள் பல்கலைக்கழகம் இஸ்ரேலுடனான அதன் தொடர்பை வெளிப்படுத்த வேண்டும் என்றும் இஸ்ரேலிய நிறுவனங்களுடனான உறவுகளை துண்டிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர்கள் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், காசா பகுதியில் உடனடி போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கிறது மற்றும் பாலஸ்தீனிய பிரதேசங்களில் உள்ள கல்வி நிறுவனங்கள் மீதான எந்தவொரு தாக்குதலையும் கண்டிக்கிறது.

# மாகாண சட்ட மன்ற சிறப்புரிமையில் நீதிமன்றம் தலையிடாது எனத் தீர்ப்பு



ஒன்ராரியோ, மே 31

ஒன்ராரியோ கன்சர்வேட்டிவ் அரசாங்கத்தினால் தம் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி மாகாண சபை உறுப்பினர் முன்வைத்த கோரிக்கை ஒன்ராரியோ நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ மாகாண சபை உறுப்பினர் சாரா ஜமாவினால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் தலையிட தமக்கு அதிகாரம் இல்லை என ஒன்ராரியோ நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவினால் இந்த வியாக்கியானம் வழங்கப்பட்டது.

இந்த விடயம் 'சட்டமன்ற சிறப்புரிமை' குறித்தது என அந்த நீதிமன்ற வியாக்கியானத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வது குறித்து பரிசீலிப்பதாக சரார ஜமா தெரிவத்துள்ளார்.

# வெளிநாட்டு தலையீட்டை எதிர்க்கும் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்க்கட்சிகளும் உதவுமாம்!

ஒன்ராரியோ, கனடாவில் வெளிநாட்டு தலையீட்டை எதிர்க்கும் சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் லிபரல் கட்சித் தலைமையிலான அரசாங்கத்திற்கு உதவ கன்சர்வேட்டிவ் கட்சி விருப்பம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு குறுக்கீடு சட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கு உதவத் தயாராகவுள்ளதாக பிரதான எதிரக் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி தெரிவித்துள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், வெளியுறவு விமர்சகருமான மைக்கல் கொங்கினால், பொது பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் ல பிளாங்குக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.



அமைச்சர் டொமினிக் ல பிளாங்க் சட்டமூலம் சி-70 எனப்படும் வெளிநாட்டு தலையீட்டை எதிர்க்கும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த மாத ஆரம்பத்தில், கனடிய அரசியலில் வெளிநாட்டு தலையீட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மத்திய அரசு இந்த சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியது.

இந்த சட்டத்தின் விரைவான முன்னேற்றத்தை உறுதி செய்ய நல்லெண்ண நம்பிக்கையுடன் பணியாற்ற தயாராக உள்ளார்கள் என மைக்கல் கொங் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வாதிகார அரசுகளின் அச்சுறுத்தல்களில் இருந்து எமது ஜனநாயக அமைப்புகள், தேர்தல்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய அரசாங்கமும் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சிகளும் இணைந்து செயல்பட வேண்டும் எனவும் கொங் கூறியுள்ளார்.

# யூதப் பள்ளியில் நடந்த சூட்டுக்கு புலம்பெயர்ந்தோர்தான் காரணம்

## ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் கூறுகின்றார்

ஒன்ராறியோ, மே 31

கடந்த வார இறுதியில் நோர்த் யோர்க்கில் உள்ள யூதப் பெண்கள் தொடக்கப் பள்ளியில் துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கு புலம்பெயர்ந்தோர்தான் காரணம் என்று ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

டொரன்டோவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடன் இணைந்து பேசிய ஃபோர்ட் சனிக்கிழமை அதிகாலையில் பைஸ் சாயா முஷ்கா பாடசாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைக் கண்டித்தனர்.

'என்ன பைத்தியக்காரத்தனம் பாடசாலைகளில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வது? அது ஏற்றுக்கொள்ள முடியாதது,' என்று ஃபோர்டு குறிப்பிட்டார்.

'இவர்கள் பிடிபட வேண்டும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், சிறையில் தள்ளப்பட வேண்டும். மேலும் ஒன்ராரியோவில் எங்கும் இதை நான் சகித்துக்கொள்ள மாட்டேன்' என்று அவர் தொடர்ந்தார்.

யூத எதிர்ப்பு வெறுப்புக் குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், யூத சமூகங்களை அவர்களின் அரசாங்கங்கள் எவ்வாறு பாதுகாக்கின்றன என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, ஃபோர்டு புலம்பெயர்ந்தோர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னால் இருக்கின்றனர் எனஜ் கூறினார்.